
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1988 ★ இதழ் — 155


## அறுபத்தொன்றும் அறுபத்தொன்றும்

இதற்கும் இவருக்கும் ஒரே வயது. வெவ்வேறு நாள்களில் தோன்றினுலும் இதுவும் இவரும் 1927ஆம் ஆண்டிற்குரியதும், உரியவருமாவர். சென்ற ஆண்டு மணி விழாவையும் சஷ்டியப்த மங்கலத்தையும் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. எனினும் அன்னை காமாட்சியம்பாள் கடைக்கண் பார்வையில் ஆயிரக்கணக்கானோர் பொங்கிப் படைத்துண்ண அம்பாள் திருவருள் பாலித்தாள்.





இன்று ஓரளவுக்கு மூச்சுவிடுகிறோம். இது பெருமூச்சாக மாறக்கூடாது என்று அம்பாளை வணங்குகிறோம்.

இன்று நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிக்கு இதுகாறும் வந்து குவிந்த வாழ்த்துக் கடிதங்கள் அதிகம். இன்னும் இன்னும் பல்லாண்டுகள் பணி செய்வதற்குப் பக்கபலம் நீங்களே. நீங்கள் தொழிலகத்தின் உற்பத்திகளுக்கு அமோக ஆதரவு கொடுத்தால், பன்முகமான அறப்பணிகள் தாமே நடக்கும்.

வாழ்க! வணக்கம்!!

★ நட்புக்கொண்டபின் பிழைகாணலாகாது ★

சிவமயம்



## சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம்

### திருவாரூர்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்**
**அறக்கணென் னத்தகும் அடிகள்ஆ ரூரரை**
**மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்**
**உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே.**

திருச்சிற்றம்பலம்

(பக்குவான்மா ஆன்மநாயகனுப இறைவனை நினைந் துருகி, ஒருதலைக்காமம் என்னும் கைக்கிளையின் பாற்பட்டு தன் காதலைக் காதலனுக்குத் தெரிவிக்கும் வகையில் இவர் பாடியருளியது.)

பறக்கும் இயல்பிற் சிறந்த கிளிகளே, பாடும் இயல் பிற் சிறந்த நாகணவாய்ப் புட்களே, அறத்துக்குக் கண் எனத்தகும் எங்கள் ஆரூர் இறைவனை நான் ஒருத்தி மறக்க முடியாமையையும், என் காதலரை என்றும் நினைந் துருகி மெலிந்தமையால் என் கைவளையல்கள் கழன்று விழுகின்றமையையும், நான் கண்ணுறக்கம் இல்லாமல் தவிப்பதையும் எனக்காக ஒருமுறை நீங்கள் அவரிடம் சொல்லமாட்டீர்களோ?



பகைமாட்சி

**அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

ஒருவன் தன் சுற்றத்தவரிடம் அன்பில்லாதவனுய் தக்க துணையில்லாதவனுய், தானும் வலிமையில்லாதவனுய் இருந்தால் தன்பகைவனுடைய வலிமையை எவ்வாறு தொலைப்பான்

### The Nature of Enemies

He who has no love for his relations, has no powerful allies and personal prowers, cannot know the nature of his enemies and cannot wipe out their strength.

## 1988 நவம்பர் மாத நிகழ்ச்சிகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | செவ்வாய் | — | காலை 6-30 அட்டமி |
| 2. | புதன் | ... | அட்டமி நவமி |
| 3. | வியாழன் | ... | நவமி பகல் 9-44வரை |
| 5. | சனி | — | ஏகாதசி விரதம் |
| 6. | ஞாயிறு | ... | பிரதோஷ விரதம் |
| 7. | திங்கள் | — | இரவு நாகசதுர்த்தசி |
| 8. | செவ்வாய் | — | தீபாவளி |
| 9. | புதன் | ... | அமாவாசை விரதம் |
| | | ... | கேதாரகௌரி விரதம் |
| 10. | வியாழன் | — | கந்தஷஷ்டி ஆரம்பம் |
| 15. | செவ்வாய் | ... | கந்தஷஷ்டி பூர்த்தி |
| 16. | புதன் | ... | தமிழ்க்கார்த்திகை |
| | | — | பகல் 2-30 அட்டமி |
| 17. | வியாழன் | ... | அட்டமி நவமி |
| 18. | வெள்ளி | — | நவமி பகல் 10-01 வரை |
| 19. | சனி | — | ஏகாதசி விரதம் |
| 20. | ஞாயிறு | — | சாதுர்மாஸ்ய விரதபூர்த்தி |
| 21. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 23. | புதன் | ... | பூரணை - திருக்கார்த்திகை விளக்கீடு |
| 24. | வியாழன் | — | விநாயகர் விரதாரம்பம் |
| 26. | சனி | — | சேர் இராமநாதன் மறைவு |
| 29. | செவ்வாய் | ... | ஆயிலிய பூசை |
| 30. | புதன் | — | அட்டமி |
| | | | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்குருபூசை |

## நகைச்சுவை

மார்க்ருவெயின் என்னும் புகழ்பெற்ற பேச்சாளர், எழுத்தாளர் ஒரு கூட்டத்தில் பேசப் போகிருராம் என்றுல் மண்டபம் நிரம்ப மக்கள் கூடிவிடுவார்கள். அவர்கள் பணம் கொடுத்து ரிக்கற் எடுத்தே போதல் வேண்டும்.

இங்ஙனமாக மார்க்ருவென் பேசப் போனபோது ஒரு ராக்சியில் பிரயாணமானுர். அவர் ராக்சிக்காரனிடம் "நீ ரிக்கற் எடுத்துவிட்டாயா" என்று கேட்டார். "ரிக்கற் எடுத்தும் என்ன பயன் ஐயா, சிலமுறை நான் இடமில்லாமல் நின்ற வண்ணமே கேட்க வேண்டியிருந் தது." அப்படியா? மார்க்ருவெயினும் பாவம் நின்றே பேசவேண்டியிருக்கிறது" என்ருர்.

★ ஈயாதவனை அவனுடைய செல்வமும் இகழும் ★



## அறஞ் செய்து வாழ்பவருக்கு அறுபத் தொன்று

நாடெங்கும் இருந்து நன்றிக் கடிதங்களும் பாராட்டுக் கடிதங்களும், வாழ்த்துக் கடிதங்களும் வந்து குவிய, தான் இன்னும் இன்னும் இல்லாதவர்களுக்கு எடுத்து எடுத்துக் கொடுப்பதற்குத் தன்னைத் தயாரித்துக் கொண்டிருப்பவர் வேறு யார்?


முன்னமே கொடையாளர் வரிசையில் சிவதர்ம வள்ளல் என்றும் சிவநெறிப்புரவலர் என்றும் பதினைந்துக்கும் மேலான பட்டங்களை அன்பர்கள் ஆராமையோடு வழங்க மகிழ்ந்தும் நாணியும் இருப்பவர் அவர்.

தன்னைத் தானே தினமும் தியாகஞ் செய்தவாறே, தன் தேவைகளைக் குறைத்து, தம்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறும் வெங்குறை தீர்க்கிற்பர் விழுமியோர் என்ற பிரகாரம் பிரர்க்குதவும் பெரும் பண்பு வாய்த்தவர் அவர்.

அன்று எப்பவோ சங்கராச்சாரிய சுவாமிகள் பிச்சை கேட்டு வெளியே நின்ற போது, ஏழைப் பெண் ஒருத்தி, தனது உபவாசத்தின் பின் பாரணைக் கெனவைத்திருந்த அழகிய நெல்லிக்கனியைச் சங்கரரின் பிச்சாபாத்திரத்தில் இட்டுப் பொன் மழை பெய்யப் பெற்றாள் அவள். பொன்னின் பெயராய கனகம் ஓரளவு பெற்ற கனகராசா தனது வருமானத்தில் பெரும் பகுதியைப் பலவித சமூகசேவைகளிலும் தேவைகளிலும் செலவிட்டு மகிழ்வதால் அவரின் வலக்கை தருகையாகிற்று. அவரின் தர்மபத்தினி இன்னும் இன்னும் அவரைக் கொடுக்கும் உண்ணம் துண்டும் கையளாகித் தடாமலிருக்கும் தடாதகையினளாய்ப் புகழ் பெற்றவள், ஈவது விலக்காத இல்லறத்தாள்.

மனிதன் எந்த நிலையிலும் கொடுத்தல் வேண்டும், கொடுப்பதற்குத் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டும், செல்வம் கொடுப்பதற்கே சிவன் தந்தது. உலகத்தவர் கொடுக்கும் நிலையிலே இருத்தல் வேண்டும். இல்லை என்று சொல்லாத இயற்பகைநாயனர் எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார்.

கொடுப்பவர் பிரதி பலன் எதையும் எதிர்பார்க்கலாகாது அன்பைக் கொடு, உதவியைக் கொடு, உன்னால் இயன்றவரை சிறிதேனும் கொடு இறைவன் நமக்குக் கொடுப்பது போல நாமும் கொடுத்தல் வேண்டும்.



## திருக்கோயில்

கடவுள் ஒருவர் இருக்கிறார் அவர் எங்கும் இருக்கிறார். அவர் வளியில் இருக்கிறார். காற்றில் இருக்கிறார். தீயில் இருக்கிறார், நீரில் இருக்கிறார். நிலத்தில் இருக்கிறார் அவர். பூதங்கள் தோறும் இருக்கிறார். அவற்றுக்கு அப்பாலும் இருக்கிறார்.

அவர் எங்கள் உள்ளத்தில் இருக்கிறார், மனத்தகத்தான் என்பர். நெஞ்சில் இருக்கிறார் என்பர் நாம் நினைக்கும் போது, நினைப்பற நினைக்கும் போது இதோ இங்கே இருக்கிறேன் என்று உள்ளே இருந்து சொல்லுவார். நெஞ்சம் இறைவனுக்குரிய இடமாக வைத்தவர் வேறு ஆசைகளுக்கு இடமளிக்க மாட்டார்கள். அப்படியானல் நெஞ்சம் என்னும் மனம் அமைந்த உடம்பு என்ன? அது ஓர் ஆலயம் என்பர் பெரியோர். இந்த உடம்பின் உருவஅமைப்பில் எழுந்ததே ஆலயம். உடலே திருக்கோயில், உள்ளுறையும் உயிரே இறைவன், தேஹோ தேவாலய ப்ரோக்தோ ஜீவோ தேவ! ஸநாதந:

ஆன்மா என்னும் உயிர் அழிவற்றது. அதன் உயிர்ப்பு உடம்பெங்கும் உள்ளது ஆனல் உயிர்ப்பை இருதயம் நன்கு அறிவிக்கிறது. கோயில் முழுவதிலும் இறைவன் சாந்நித்தம் உண்டு ஆனல் கர்ப்பக்கிருகம் என்னும் ஆதி

★ செல்வத்திற்கும் வறுமைக்கும் பழவினை காரணம் ★

மூலத்திலே தான் சாந்நித்யப் பெருக்கு எடுக்கிறது. பரவுகிறது சாந்நித்யமும் சைதன்யமும் அமைந்த மூலஸ்தானம் கருவறை. அதுமிக்க புனிதமும் இரகசியமும் அமைந்த ஒரு குகை.

## மூன்றுவது தேவை முக்கியமானது

பாடசாலை பெரிதாயினும் பல்கலைக்கழகமளவானதாயினும் படிப்பதற்கே வாய்த்தது. படிப்போம். திருக்கோயில் சிறியதாயினும் பெரியதாயினும் வணங்குவதற்கே வாய்த்தது. வணங்குவோம். ஆலயம் தொழுவது சாலவும் நன்றுதானே. தொழுவோம்.

நம்மை வழிப்படுத்த நெறிப்படுத்த ஒரு குரு வேண்டும் குருவருள் பெரிது. இன்றைய கட்டத்தில் எம்மை ஒன்றுபடுத்தி நெறிப்படுத்தி உய்யும் வழி காட்ட உயர்ந்தோர் கூடிய நிறுவனம் ஒன்று தேவை. அது சிறியதாயினும் நன்று. கிராமாபிவிருத்தி, சமூகநலன் கருதும் சங்கமோ சபையோ போதும். சேரவாரும் செகத்திரே என்று அறைகூவி அழைத்துத் திருநீறும் திருமுறையும். திருவைந் தெழுத்தும் வழுவாது நிலைக்க முயற்சிப்போமாக.

எமக்குத் திருகோணமலை, வவுனியா மாவட்டங்கள் வழிகாட்டுவன போல ஒளி தெரிகிறது, வடக்கில் ஒரு பெரிய ஒளித்தம்பம் தாபனம் வேண்டுமே என்செய்வோம்?

## தொழிலகம்

முருகேசு கந்தையாபிள்ளை அன்று 1927 ஆம் ஆண்டில் கைத்தொழில் செய்ய விரும்பி குடிசைத்தொழிலாகவே சவர்க்காரம் செய்ய முற்பட்டார்.

வெள்ளைக்கார அரசாங்கம் நடைபெற்ற காலத்திலே வீட்டுக்கு வீடு வெளிநாட்டுச் சவர்க்காரங்கள் விந்தை புரிந்துவந்தன. ஆனால் சவர்க்காரம் அழுக்கை நீக்கினவே தவிர ஆடைகளுக்கு வெண்மை தரவில்லை. வெண்மை தர நீலம் தோய்க்கவேண்டியதாயிருந்தது.

விந்தைபுரிந்த சவர்க்காரங்களுக்கிடையில் கந்தையாபிள்ளை விட்ட சவர்க்காரம் விந்தைபுரிந்ததோடு, விளையாட்டும் காட்டியது. அது நீலம் தோய்க்காமலே அழுக்கை நீக்கியதோடு வெண்மையும் தந்தது. கந்தையாபிள்ளையின் கண்டுபிடிப்பு நூதனமானது. சவர்க்காரத்திலேயே நீலத்தையும் கலந்து விளையாட்டுக் காட்டியது. நீலக்கட்டி நீலக்கட்டி என்ற பெயர் அறுபத்தொரு ஆண்டுகளாக ஒலிக்கிறது.

## தொழிலதிபர்

மில்க்வைற் தாபகர் கந்தையாபிள்ளையின் மைந்தர்களுள் 1927 இல் பிறந்தவர் கனகராசா. இளமையில் பீற்றர் பாடசாலை என வழங்கிய கில்னர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி பயின்றபின் மாமனுர் கார்த்திகேசு கம்பனியில் நடத்திய கடையில் மைத்துனன் செல்லையாவுக்கு உதவியாய் இருந்தார். சரளமாகச் சிங்களம் பேசப்பழகியது மிச்சம். கடையைவிட்டுத் தமையனுர் இரத்தினகோபால் அழைப்பை ஏற்றுத் தோட்டப் பாடசாலை ஆசிரியரானுர். கண்டியில் தெனக்கும்பராவில் சுவாமி சிவானந்தரின் சீடர் சுவாமி சச்சிதானந்தர் நடத்திய யோகாசன வகுப்பில் நன்கு பழகி யோகாசன நிபுணராகிச் சான்றிதழும் பெற்றுர். சிவானந்தர் சிந்தனையில் மூழ்கி, அன்பர் பணிபுரிய ஆளாகி மீண்டார். தந்தையாரின் குடிசைத்தொழிலை யந்திர மயமாக்கினுர். மாட்டுவண்டிகளின் இடத்தில் மோட்டார் வான், லொறிகளை ஓடவிட்டார். ஓடிக்கொண்டே இருக்கிறுர். ஓயவிடாமல் இயங்கச்செய்தல் உங்கள் கடன்.



## சுவாமி விவேகானந்தர்

நரேந்திர நாத் தத் என்னும் வங்காளத்து இளைஞன், இராமகிருஷ்ணபரமஹம்சரின் உபதேசத்தாலும், அன்னை சாரதா தேவியின் அரவணைப் பாலும் துறவியாகி, தூயவராகி, சுவாமி விவேகானந்தராகி, தம்மை உலகத்துக்கே தியாகம் செய்தார்.

அவர் பேருள்ளம் கொண்டவர். தாராளமனப் பான்மை உள்ளவர், விசாலமான இருதயம் படைத்தவர். பரோபகார உணர்வுமிகுந்தவர், பிறர் துன்பங்கண்டு இரக்கப்பட்டு உருகுபவர், தாம் பெற்ற நலத்தைப் பிறரும் பெறல் வேண்டும் என்று பாடுபட்டவர்.

## நல்ல உபகரிப்பு

நாங்கள் ஆயிரக்கணக்கான வில்வங்கன்றுகளை நாற்றுமேடைகளில் உண்டாக்குவதற்கு உதவியாக ஒரு சாக்கு வில்வம் பழங்களை உபகரித்தவர் அ. ம. இராசேந்திரம் அவர்கள்.

## தமிழ் – இந்து நாகரிகம்

மூதூர் பிரதேசத்தில் சம்பூர் பிரிவில் ஆனந்த நிலையம் அரும்பணிபுரிகிறது, வசதியுள்ளவர்கள் நூல்கள் உதவி ஊக்கப்படுத்துவார்களாக.

## ஆதீனத்தில் கோகுலம்

ஆலயங்களோடு பசுமடம் இருத்தல் வழக்கம் யாழ்ப்பாணத்து ஆதீனத்தில் நல்லூரில் ஒரு கோகுலம் அமைத்தபோது, தொழிலதிபர் மகாசந்நிதானத்தின் பண்பார்ந்த முயற்சியையும், பசு வளர்த்தலின் பயனையும் பற்றிப் பேசினுர்.

## சிறுவர் சேகரிப்பு

பண்டத்தரிப்பில் சித்திவிநாயகர் சனசமூகநிலையத்தில் பெருந்தொகையாகக் குவிந்தவை, மில்க்வைற் மேலுறைகள், இவை யாவும் சிறுவர்கள் சேகரித்துக் கூட்டாகப் பெரிய பரிசு பெறுவதற்காகவாம். நல்ல முயற்சி, பாராட்டுகிறேம்.

## சமயதீட்சை அவசியம்

நாங்கள் சைவசமயத்தவர்கள் என்று பெருமைப்படுவதற்குச் சிவதீட்சை அவசியம், இத்தேவையை கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சிப் பிரிவில் அதிபர் அரியரத்தினம் அரிய முறையில் இளைஞர் பொருட்டுச் செய்துவைத்தார். அவருக்கு எங்கள் பாராட்டு.

## திருநெறிக்கழகம்

கிளிநொச்சியில் திருநெறிக்கழகம் பெயர் பெற்ற நிறுவனம் நல்ல பணிபுரியும் இந்த நிறுவனம் அண்மையில் பெருமளவில் முருகன் கோயிலில் கும்பாபிடேகம் செய்து முருகன் புகழ் நூல்கள் வெளியிடும் முயற்சியில் தோய்ந்து இருக்கிருர்கள் கந்தரலங்காரம், அநுத்தரநுபூதி கந்தர் கலி வெண்பா, திருமுருகாற்றுப்படை வெளிவரவுள்ளன.

## நல்ல திருப்பம்

மட்டக்களப்பில் ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் மகாவித்தியாலயத்தில் இப்போது உயர்தர வகுப்புகளும் நடைபெறுகின்றது. ஜீவனுனந்த மஹாராஜ் ஆசிகூறி ஆரம்பித்து வைத்த வகுப்பு முன்னேற்றமடைந்து வருகிறது. அதிபர் வி. த. குமாரசாமி நல்ல முயற்சி எடுத்துவருகிருர்.

## ஆத்மஜோதி நா. மு. அவர்கள்

ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்களின் பணிகளைப் பாராட்டி அவரின் எழுபதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய வேளையில் தொழிலதிபர் அன்னருக்கு உருத்திராக்க மாலையும் கதராடையும் இட்டு வாழ்த்திப் பாராட்டினுர். விழா சாவகச்சேரியில் வாரிவனநாதர் கோயிலில் நடைபெற்றது.

## யோகாசனப் பயிற்சி நிறைவு

நல்லை ஆதீனத்தில் சுவாமி சிதானந்த யோகியார் நடத்திய யோகாசனப் பயிற்சி நிறைவில் போட்டியும் பரிசளிப்பும் நடைபெற்றபோது தொழிலதிபர் கனகராசா அவர்கள் தாமே யோகக்கலை பயின்றிருந்த நிபுணரானமையால் மத்தியஸ்தம் வகித்தும் பரிசுகள் கொடுத்தும் ஊக்கப்படுத்தினுர்.

## யாழ்ப்பாணத் தமிழரசர்கள்

புலவர் பண்டிதர் வேலணையூர் ஜெகந்நாதன் அவர்கள் உருவாக்கிய நூல் வெளியீட்டு விழாவில் அன்னருக்குப் பொன்னுடை போர்த்தி நூல் வாங்கிப் பாராட்டிய தொழிலதிபரின் அன்புக்கரத்தையும் அன்பு மனத்தையும் வெகுவாகப் பாராட்டினுர்.

## நீர் கொள்கலன்

வேலணை துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய அதிபர் வேண்டிக் கொண்டதற் இணங்கிப் பெரிய நீர் கொள்கலன் உதவிய தொழிலதிபரை அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டி நன்றி தெரிவித்தார்கள்.

## பண்டாரவளை பூனுகலைத் தோட்டம்

இத் தோட்டத்தில் அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பெற்ற மகளிர் மன்றம் இப்பகுதியில் மகத்தான பணிபுரிவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்தமையை மகளிர் மனமுவந்து பாராட்டியுள்ளார்கள்.

## கந்தரோடையில்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மகிழமரம் நாட்டியும், ஆடல்வல்லான் படங்கள் நூற்றுக் கணக்கில் விநியோகித்தும், வழிபாட்டு மண்டபத்தில் சிதம்பரேசனின் பெரியபடம் எழுந்தருளச் செய்தும் உதவிய மில்க்வைற் தொழிலதிபரின் உதவியை அதிபர் பாராட்டி நன்றி கூறினுர்.

## கரவெட்டியில் நூலகம்

கரவெட்டி மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கம் நடத்தும் நூலகத்திற்குத் தொழிலதிபர் கனகராசா அவர்கள் இயன்றளவு நூல்கள் அன்பளிப்புச் செய்தமையைச் செயலாளர் பாராட்டியுள்ளார்.

## கொடிய வறுமை!

உலகில் நூறுகோடி மக்கள் போதிய உணவின்றி வருந்திஞர்கள். அவர்கள் மூன்றுகோடி ஐம்பதுலட்சம் பேர் இறந்துவிட்டார்கள். என்று பொதுநலவாயப் பெரியார் நம்பால் கூறியுள்ளார். வறுமை ஒருபுறமாக, உலகில் ஐம்பது இடங்களில் துப்பாக்கிகள் தாண்டவமாடுகின்றன என்றும் கூறி வருந்திஞர்.

## மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்

இம் மன்றத்தாரின் நற்பணிக்குத் தொழிலதிபர் உபகரித்த தொகையை இவர்கள் நன்றியுடன் ஏற்றுப் பாராட்டியுள்ளார்கள்.

★ ஈவோர் செல்வத்தை எவரும் பெறுவர் ★

## மூவர் நினைவாக

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த த. இரத்தின கோபால், மனைவி பராசக்தி, மைந்தன் சக்திபாலன் ஒரே வேளையில் 19 - 10 - 1987 இல் போனமை பெருந் துயரம், அவர்கள் நினைவாக திருநெல்வேலி, கைதடி, பருத்தித்துறை, மானிப்பாய், தெல்லிப்பழை சைவச் சிறுவர்கள் சோறுண்டமை பெரிய அறச்செயல், இன்னும் குழந்தைப்பாடல்கள், சைவ வினுவிடை வெளியீடு செய்தமை பெருந்தன்மையான கல்விப்பணி, போனவர்கள் நினைவாக நடைபெற்ற புண்ணியச் செயல்களை நினைந்து உருகுகிறோம், வணங்குகிறோம்.

## எல்லோரும்வாழ வழி

நீர்வேலி வேதவல்லி கந்தையா அம்மையார் அடக்கமாகப்பணி செய்தவர், அவர் உலகப்புகழ் பெற வேண்டியவர், உள்ளூர்ப் பெண்கள் வாழ வழிவகுத்த கையோடு பொருளாதாரமேம்பாட்டுக்கும் சிலதுறைகளைத் துவங்க வைத்தவர், வாழைப்பூ மிகுந்த நீர்வேலியில் அதனை வடகமாக்கிப் பயன் கண்டவர், பெண்குலத்திற்கு ஒரு திலகமாக இருந்தவர். பணிகள் மிகப்பல.

## மில்க்வைற் வெளியீடுகள்

மில்க்வைற் வெளியீடுகள் யாவும் நீண்டகாலமாக ஒருவர் கையாலே எழுதப் பெற்று, ஒரு அச்சகத்திலேயே பதிக்கப்பெற்று வருகின்றன, இன்று புறமதத்தவர்கள் பலர் இவ் வெளியீடுகள் தங்கள் பிள்ளைகளுக்கு வரப்பிரசாதங்களாக உள்ளன என்று எழுதிப் பெற்றுப் பயனடையச் செய்கிறார்கள்.

## ஆனால் ஒன்று

நாங்கள் நல்லொழுக்கம் சம்பந்தமாகவே சிவானந்தர் சுத்தானந்தர், காந்தி, விவேகானந்தர், வினோபாஜி தாகூர், திருவள்ளுவர், முதலானோரின் கருத்தைத் தொகுத்து வெளியிடுகிறோம்.

## யார்இந்த மாக்மிலன்

பிரபல புத்தக வெளியீடுகள், புத்தகசாலைகளோடு தொடர்புடைய குடும்பத்திலே பிறந்து 92 ஆண்டுகள் வாழ்ந்த ஆங்கிலேயர் பழைமை தழுவும் கொன்சேவேற்றிவ் கட்சியில் 1924 முதல் பாராளுமன்றம் கண்டு, பலதுறை மந்திரியாயிருந்து, பிரதமராய் அரசாங்கம் அமைத்தவர், பொதுநலவாயத்தை உருவாக்கியவர்களுள் ஒருவர் பல நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கியவர். சில யுத்தங்களை நிறுத்தியவர். அவருடைய சேவையைப் பாராட்டிய இராணி அவரை ''ஏர்ள்'' என்னும் பெருங்குடிப் பிரபுவாக்கினர் அவர் 1957-1963 ஆண்டுக்காலத்து இங்கிலாந்தின் பிரதமர்.

## பெரிய வாத்தியார்

ஒரு பெரும் மாநிலம்,மிகப்பழைய நாகரிகம். சமய வேறுபாடு, சாதி வேறுபாடு அதிகம், பொருளாதார நிலையிலும் தகுதி வேறுபாடு, இத்தனை வேறுபாடுகளுக்கிடையேயும் தமது நடிப்புத்திறமையால் நாடறிந்தவராகி, அரசியலில் ஈடுபட்டு மாநில முதல்வராகி எல்லோரும் வாழ வகுத்து, புதியன பலவற்றைப் புகுத்தி எல்லோராலும் வாத்தியார் என வாயார வாழ்த்தப் பெற்ற ஒருவரின் பெயர் மூன்றெழுத்தில் அடங்கும். இவ்வாறு தொழிலதிபர் கனகராசா அவர்கள் 71 மரங்கள் நட்டு M. G. R சிலைதிறப்பு விழாவில் பேசினர்.

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா

இந்தியப்படையினருக்கு முந்திய நடமாட்டக்காரராய தென்னிலங்கையர் வவுனியாவுள் புகுந்த போது அந்த மண்டபத்தைத் ''தேவாலய'' என்று மதித்தார்கள்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் முப்பத்துநான்கு ஆண்டுகளாக அரும்பணி செய்து வருகிறது. சைவமும் தமிழும், கலையும் கல்வியும் வளர்க்கிறது, இன்று 153 அங்கத்தவரோடியங்கும் இச்சங்கம் ஏன் ஆயிரவராகக் கூடாது, உடனடியாக மாவட்ட மக்கள் இதில் சேர்ந்து மானங் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

## பிறப்புரிமையுள்ள ஊரில்

தன்பெற்றோர், தன்மொழி, தன்சமயம் தான் பிறந்தஊர் இவற்றில் அபிமானம் வேண்டும். இது சைவத்தமிழ் நாகரிகவளர்ச்சியில் கனிந்த இந்துப் பண்பாடு, ஒழுக்க சீலம், சால்பு என்றெல்லாம் பேசலாம். கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தொழிலதிபர் கனகராசா அவர்கள் அவ்விடத்திற்குச் செய்த பணிகள் நிற்க, அன்று அங்கே நமசிவாய சனசமூக நிலையத்திற்கு ஒரு சங்க மண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார், அதற்குரிய நிலத்தை உபகரித்தவர்களை வாழ்த்திப் பணிபுரிவோரை ஊக்கப்படுத்தினர்.

## அறக்கொடை

அளவெட்டி பிள்ளையார் கோயில் மண்டபத்தில் ஆண்டு தோறும் புத்தாண்டுக் காலத்தில் அமரர் சின்னப்பு அவர்கள் நினைவாக நூறுக்கும் அதிகமானோருக்கு உணவு, உடை, அரிசி, பணம் கொடுக்கப் பெறும் அறக்கட்டளை தானே நடைபெறுகிறது, ஓய்வு பெற்ற அதிபர் விசுவநாதன் முன்னின்று நடத்தும் போது, தொழிலதிபர் கனகராசா சாட்சியாய் இருப்பார், இது அமரர் சின்னப்பு அவர்களின் அன்புக் கட்டளை. பிரசாதம், புடைவை, அரிசி இவற்றை நிரப்புவதற்குப் பெரும் தொகையான பொலித்தீன் பைகள் மில்க்வைற் உபகரித்தல் மற்றொரு கொடை. இம்முறை அறுபது ஆண்களும் நாற்பத்தைந்து பெண்களும் மனம் நிறையப் பெற்றார்கள். எஞ்சிய பொருள்கள் ஏனைய ஏழைகள் கைகளில் தவழ்ந்தன. வாழ்க அறப்பணி.

★ அறிவில்லாதவர் அதிகமாகப் பேசுவர் ★

## மூவராயிருந்தபெருமை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூறுண்டு கண்ட பெருமை பெற்றது. முத்தமிழ் வளர்த்தது. முதுபெருஞ் சைவம் வளர்த்தது, ஆசிரியப்பணியில் முன்னேடிகள் பலரைக் கண்டது.

அயலில் பிறந்து அங்கே மொழி பயின்று நல்ல மாணுக்கஞகி வளர்ந்து, பல்கலைக்கழகத்துப் பட்டம் பெற்று மீண்டுவந்து, ஆசிரியராய் அரும் பணிஆற்றி அநுபவமுதிர்வில் பிரதம கல்வியதிகாரியாகி, பரிபாலன பக்குவமறிந்து, மீண்டு அதிபராக வந்தமர்ந்து, தன் பழைய கல்லூரியைப் பலதுறைகளிலும் புகழ் பெறநடத்திய பெருமை இரண்டு எழுத்துக்காரன் ஒருவனுக்கே உரியது, அந்த இரண்டு எழுத்துக்களும் அவரின் தந்தை யாரையும், பாட்டனுரையுமே குறிக்கும், அவை "பி. எஸ்" என்பனவாம்.

பி. எஸ். என்பனவற்றை முதலெழுத்தாகக் கொண்ட குமாரசுவாமி கெட்டிக்காரன், நல்லவர், தோழமை நெறியினர், பண்பட்டவர், அன்புவழியினர் அதரவு வழியில் அணைத்துக் காரியம் பார்த்தவர், மாணுக்கர், ஆசிரியர், பெற்ருர், பழைய மாணுக்கர், எல்லோருடைய உள்ளத்தையும் ஊடுருவிப் பூமாலையின் நார் போலப் புறம் போகவிடாது இழுத்துப் பணிபுரிய வைத்துத் தாமும் பணிபுரிந்தவர், இந்துக் கல்லூரியின் அதிபர்களின் பாரம்பரியத்தைக் கண்டு காட்டிப் பேணியவர் பெரியவர்.

## கொடுக்கத் தெரிய வேண்டும்

வரண்டபிரதேசமாய எங்கள் பகுதியில் ஓரளவு பசுமை காணக்கூடிய தாயிருந்தால் அது மில்க்வைற் தொழிலதிபர் கொடுத்த மரங்களும் நாட்டிய மரங்களுமே என்பதே பேச்சு.

இன்று எதற்கும் மரங்கள், எங்கும் மரங்கள் நடுவதையே முழுமூச்சாகக் கொண்டவருக்கு வீட்டுவளவிலேயே நாற்று மேடைகள் கன்றுகளைத் தந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றைப் பரிபாலிப்பதற்கு முழுநேரத் தொழிலாளர் விடயமறிந்தவராய் இருக்கின்ருர்கள்.

எங்கள் மண்ணில் வளரமாட்டாதவை என்று நம்மவர் சிலர் கருதிய தாவர இனங்கள் மில்க்வைற் தொழிலதிபரின் மந்திரசக்தி வாய்ந்த கைபட்டாற் போலும் நன்ருக வேரூன்றிப் பரவி வளர்கின்றன, உங்களுக்கு வேண்டிய கன்றுகளை முன்னுடியே விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## ஏடு தொடக்குதல்

நாட்டில் வெள்ளைக்கார நாகரிகம் கண்ட நேசரி, கிண்டர் காடின் வகுப்புகள் நல்ல பணிபுரிகின்றன என்று பாராட்டும் போது, அவர்கள் எங்கள் பழைய நாகரிக முறையில் பனையோலை ஏடு தொட்டு அ. ஆ. படித்து ஆரம்பிக்கிருர்கள், இந்த ஆண்டில் நூற்றுக்கும் அதிகமான சங்கங்கள், நிறுவனங்கள். பாடசாலைகள், கோயில்கள், மாதர் சங்கங்கள் சராசரியாக 25, 50 என்று எங்களிடம் ஏடுகள் பெற்று 2000 பிள்ளைகளுக்கும் அதிகமானேருக்கு அ. ஆ. சொன்னுர்கள் அவர்களுக்கும், ஏடுகள் தயாரிப்பதற்கு எமக்கு ஓலைச் சார்புகள் உபகரித்தவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றி.

## இருபத்தாரும் தேதி

இட்டதொரு நவம்பர் மாதம் இருபத்தாரும் தேதியிலே உயிர்துறந்தாராம். பத்தொன்பதாம் நூற்றுக்குமேல் முப்பதாம் வருடத்திலே என்று இராசபெருமாள் என்னும் ஆசிரியர் 1930 ஆண்டின் நவம்பர் மாத இறுதியிலே பாடினுர்.

சேர். இராமநாதன் மறைந்தும் மறையவில்லை, கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலும், இணுவில் இராமநாதன் கல்லூரியும், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியும் இன்னும் இந்து போட் பாடசாலைகளும் பிறவும் அவருடைய எச்சங்களாய் அவர் தக்கார் எனக் கூறி நிலவுகின்றன.

இவ்வாருக இணுவிலிலும் திருநெல்வேலியிலும் ஏக்கர்க் கணக்கான நிலமெங்கும் பலமுறை மரம் நாட்டிப் பசுமை தேடிவருபவர் மில்க்வைற் தொழிலதிபர். அண்மையில் இராமநாதன் கல்லூரி பவளவிழாவின் முன்னேடி நிகழ்ச்சிகளாகப் பலவித மரங்களை நாட்டி உபகரித்துமுள்ளார்.



## இசை மரபு

எங்கள்தமிழ் இன்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ் என்றெல்லாம் வழங்கிய போதிலும் அதை முத்தமிழ் என்பதில் முடிவிலா இன்பம் பயக்கிறது, இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பனவுள் இசையும் நாடகமும் காமம் பயப்பன, என்று கருதிய சமணர் இசையைக் கேட்டு முட்டு என்றும், நாடகத்தைக் கண்டு முட்டு என்று ஏதோ தீட்டுத் துடக்கு என்று ஒதுக்கி வந்தார்கள். ஒதுக்கப்பட்ட அவை இன்று பீடு நடை போட்டு வீடுகளையும் பாடசாலைகளையும் விளங்கவைக்கின்றன.

வீட்டுக்குள்ளே இருந்தவாறே பெண்கள் பாட்டுப் பாடப் பழகினுர்கள். சின்னப்பிள்ளைகளைத் தொட்டிலில் ஆட்டிப் பாடினுர்கள், கும்மி கோலாட்டம் ஆடிப்பாடினுர்கள். பண்டிகை விழாக்களில் பாடினுர்கள். திருமணவைபவத்தில் ஊஞ்சல் ஏசல் முதலியவற்றில் பாடினுர்கள், முத்தமிழில் நடுவண் குறிக்கப்பெற்ற இசை இயலையும் நாடகத்தையும் இசைவித்தது. தமிழர் வாழ்வை மலர்த்தியது. இசையின்பம் பாரியது. அது குரலி

லும் நரம்பிலும், குழலிலும், மேளத்திலும் ஒலித்தது, பட்ட மரத்தைக் குழலாக்கிய இசை செத்த மிருகத்தின் தோலை மேளமாக்கியது, அவை பைந்தமிழாயும் செந்தமிழாயும் ஒலித்தன; இராவணன் மேலது நீறு என்றுற்போல இராவணன் மேலது இசை என்பதும் உண்மையேயாம்,

## சர்வதேசத் தொடர்புகள்

உலகெங்கும் உறவு எனப்பண்டைத் தமிழன் கண்டதோடு, யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தரவாரா என்றெல்லாம் கூறி ஒரு சகோதரத்துவத்தை நிலைநாட்டி உலகு, உலகெலாம் உலகம் வாழ என்றே காவியங்கள் பாடத் தொடங்கினன். உலகம் உவப்ப என்று தொடங்கும் திருமுறையும் உலகெலாம் உய்ய என வாழ்த்தும் திருமுறையும் இருந்தவாறு.

தொலைபேசிச் சாதனம் அமைப்பதற்கு ஆயிரக்கணக்கான மைல் தூரம் செப்புக் கம்பிகள் ஆழ்கடலில் அமைத்தகாலம் போய் இன்று வானவெளியில் மிதக்க விட்ட உப கோளினை மையமாகக் கொண்டு பலநாடுகள் தொடர்பு கொண்டு நேர்முகமாக ஒருவரோடு ஒருவர் பேசுகிறார்கள். இனிவருங்காலத்தில் இங்கிருந்து பேசுபவர் படம் அங்கும் அங்கிருந்து பேசுபவர் படம் இங்கும் பதியும் நாள் வராமலிருக்க மாட்டாது.

இன்று பிரித்தானியா, பிரான்ஸ் முதலிய நாடுகள் தொடர்புச் சாதனவரிசை களமைப்பில் முன்னணியில் உள்ளன. சர்வதேச தொடர்பியக்க நிறுவனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன. என்றாலும் இவ்வமைப்பு அத்துலாந்திக் பசிபிக் சமுத்திரப் பரப்பை ஊடறுத்துப் பேசவே உறுதிகளைப் பெருமளவில் கொண்டுள்ளனவாகையால் ஒரு கண்டத்தில் உள்ள வெவ்வேறு நாடுகள் தமக்குள் தொடர்பு கொள்ளுதல் அரிதாகவுள்ளது. இவ்வசதிகள் எல்லா நாடுகளுக்கும் சமமாகக் கிடைத்தல் வேண்டும் மெனத் தென்னமெரிக்க நாடுகள் சார்பாக பெருவியன் இயக்கம் விண்ணப்பித்துள்ளது.

## உப்பு

உணவின் சுவைகள் ஆறு. அறுசுவை உணவு என்பது வழக்கு. அவை தித்திப்பு, கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. இவற்றுள் உவர்ப்புச் சுவையைத் தருவது உப்பு. உப்பு உணவுக்கு அவசியம் வேண்டிய சுவை. அது அளவோடு அமைதல் வேண்டும். அது உடம்புக்கு அவசியமானது.

உப்பு உணவைப் பாதுகாப்பது. ஊறுகாய், வடகம், கருவாடு முதலியன கெட்டுப் போகாமல் இருப்ப உப்பைச் சேர்க்கிறார்கள். சோடா, அயடின் முதலியன செய்வதற்கு உப்பு இன்றியமையாத மூலப்பொருள்.

உப்புத்தன்மை கண்ணீரிலும் வெயர்வையிலும் இரத்தத்திலும் உண்டு. சிறுநீரிலும் உப்புத்தன்மை உண்டு உணவு சமிபாடு அடைவதற்கு உடம்பினுள் சுரக்கும் அமிலங்கள் திரவங்களிலும் உப்புத்தன்மை உண்டு.

உலகமே ஒருபெரிய உப்பளம். நீரிலும் நிலத்திலும் உப்பு உண்டு. சில மலைகளில் உப்பு உண்டு. சுரங்கங்கள் ஏரிகளிலும் உப்பு உண்டு. கஸ்பியன் கடல் ஒருபெரிய ஏரி. அதுஉப்பு நிறைந்த நீருள்ளது.

கடல்நீரில் உப்பு நிறைந்திருக்கும். கடல்நீரை வெயிலில் காயவிட்டால் உப்பு மிகுதியாகக் கிடைக்கும். இலங்கையில் பலவிடங்களில் உப்பு தானே உண்டாகிறது அதைத் தன்படுவன் உப்பு என்பர்.

அராலி, செம்மணி, தொண்டைமானாறு, பாலாவி, ஆனையிறவு, நிலாவெளி, புத்தளம், அம்பாந்தோட்டை முதலிய இடங்களில் உப்பு விளைகிறது. ஆனையிறவில் அதிகஉப்பு கிடைக்கிறது.

ஆனையிறவில் உப்பை விளைவித்து அதை மூலப் பொருளாகக் கொண்டு மக்னீசியா, கிப்சம், பொட்டாஸ் புரோமின், பொருக்ஸ், எப்சம் குளோறின், சோடா என்பன செய்கிறார்கள். உப்பு வீட்டுத் தேவைக்கும் கருவாடு தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

## எறும்பு

எங்கே சென்றாலும் எத்தனை பேர் போனாலும் ஒழுங்காகப் போகும் எறும்பு எங்களுக்கு நல்லாசிரியன். கூட்டுவாழ்வு, சிட்டாசாரம், சேமிப்பு மனப்பான்மை, சுறுசுறுப்பான உழைப்பு, ஒத்துதவி என்பனவும் பிறவும் எறும்பு கற்பிக்கும் அநுபவ ரீதியான பாடங்களாகும்.

### அமெரிக்க காங்கிரஸ் நூலகம்

அமெரிக்காவில் வாசிங்ரன் நகரில் ஏழு கோடியே முப்பது லட்சம் புத்தகங்கள் 350 மைல் நீளமான தட்டுகளில் உள்ளனவாம்.

### நம்பிக்கையில் நம்பிக்கை

“நம்பிக்கை என்பது வாழ்வளிக்கும் வலு. அந்த நம்பிக்கை வலு இல்லாவிட்டால் வாழ்வு பாறிப்போகும்.”

— வில்லியம் யேம்ஸ்

## மில்க்வைற் செய்திக்கு மேலுறைகள் தேவை

“மில்க்வைற்” றைப்பார்ப்போம்!
மேலுறைகள் சேர்ப்போம்!
“கல்க்குலேற்றர்” போன்றே
காட்டுமாமே யாவும்

திங்களுக்குத் திங்கள்
செய்தி வந்து சேரும்
எங்கள் ஆசை தீரும்
இன்பமான தாளாம்

பாலின் வெள்ளை ஆண்டோ
பத்தும் மூன்றுந் தானே
மேலுஞ் சேவை செய்தே
மீதி நாளும் வாழ்க!

இ. தமிழரசி
ஈச்சந்தீவு

★ இயற்கை அறிவு திரியாதவரே மனிதர் ★



## குரு ஒருவர் வேண்டும்

வித்துவான் ஒருவர் தானே உருவானவர். நன்றாகப் படித்து நினைவாற்றல் துணை கொண்டு முன்னேறியவர். இடையில் நாத்திகம் பேசி நாத்தழும்பேறியவர். சங்காபிடேகமா? ஏன் நண்டுக்கோதுகளில் நீர் பெய்து ஆட்டலாமே என்றார். அவரைப்பலர் கடிந்தனர். ஒருவர் அவருக்கு நல்ல உதவிசெய்தவர். ஏனப்பா! இப்படி எல்லாம் வந்தது? என்று கேட்டார். ஐயா நான் முறையாகப் படிக்கவில்லை, முட்டாளாகிவிட்டேன் என்று தன்னைத் திருத்திக்கொண்டார். ஆனால் அவரின் வித்தை பிரகாசிக்கவில்லை. சைவசமயத்தில் ஆச்சாரிய பீடம் ஒன்றுண்டு. தட்சிணாமூர்த்தி முதல் உமாபதி சிவாசாரியர் வரை சந்தான குரவர்கள் என்பதே அந்தப்பாரம்பரியம். கிரேக்க ஞானியருள்ளும் பாரம்பரிய மதிப்பு இருந்தது சோக்கிரரீஸ் வழி பிடேற்றோ அவர் வழி அரிஸ்ரோட்டில். அரிஸ்ரோட்டிலின் சீடனே மகாஅலெக்சாண்டர். வசிட்டரின் சீடன் ஸ்ரீ இராமன் என்றாற் போல.

அரிஸ்ரோட்டில் அலெக்சாண்டரை உருவாக்கிய வரலாறு அருமையானது. பாரசீகப் பெருவேந்தன் டாறியஸ், டாறியஸ் தன்மகன் அலெக்சாண்டரை அரிஸ்ரோட்டிலிடம் ஒப்படைத்தபோது சொன்னான் "ஐயா நான் இவனுக்கு உடல் கொடுத்தேன், கடவுள் உயிர் கொடுத்தார். தாங்கள் அறிவைக்கொடுங்கள்'' அரிஸ்டோட்டில் அறிவூட்ட அலக்சாண்டர் பெரியனானான்.

## சால்டியர்

சால்டியர் பாபிலோனியாவைச் சுற்றிவர உள்ள வெளிகளில் வாழ்ந்தனர். அவர்கள் தென்இந்தியாவில் உள்ள சோழநாட்டிலிருந்து அங்குச் சென்றனர் என்பர். சால்டியர் ''ஊர்'' என்னும் இடத்தைத் தமது தலை நகராகக் கொண்டனர். சோழநாட்டினர் ஊர் எனப் படுவது உறையூர் எனத் தம்நகரைப் போற்றி வந்தனர் என்பது வரலாறு.

சால்டியரின் மன்னன் நெபுகட் நெசார் கீர்த்திவாய்ந்தவன். அவனுடைய ஆட்சிக் காலத்திலே சால்டியர் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வாழ்ந்தனர். அழகிய மாடமாளிகைகள் பலவற்றை அவர்கள் அமைத்தார்கள். அரசன் தன் மனைவியை மகிழ்வித்தற் பொருட்டு, தொங்குதோட்டம் ஒன்றை அமைத்தான். அதுமேல் மாடியில் அமைக்கப்பட்டு யந்திரங்களின் உதவியால் நீர்ப்பாய்ச்சப் பட்டதாகும். அதனை உலக அதிசயங்களில் ஒன்றாகப் போற்றினர்.

நெபுகட் நெசா காலத்தில் யூதர் யெறுசலத்திற் செல்வாக்குற்றிருந்தனர். அவன் யெறுசலத்தை அழித்து யூதரைச் சிறை செய்து பாபிலோனுக்குக் கொண்டு போனான். அவன் அசீரியா, சிரியா, பாலஸ்தீனம் பினிசியா முதலான அயல் நாடுகளை அடிமைப்படுத்தி ஆண்டான்.

சால்டியர் பூமத்திய ரேகை எனப்படும் சமரேகையை 360 பாகையாகப் பிரித்தனர். பல கலைகளிலுஞ் சிறந்து விளங்கிய சால்டியரைப் பாரசீக மன்னனான சைரஸ் என்பான் கி. மு. 539 ஆம் ஆண்டில் வென்றான்.




## தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா என்றதும் தமிழ்பேசும் மக்கள், காந்தியை உருவாக்கிய தமிழர், டர்பன் தமிழர், முனிசாமிப்பிள்ளை, நாயுடு, வைரச்சுரங்கம், நிறத்திமிர் முதலிய விபரங்கள் நினைவுக்கு வருகின்றன.

ஆங்கிலேயர் இலங்கை கரைநாடுகளை ஒல்லாந்தரிடம் கையாடிய வேளையில் தென்னாபிரிக்காவையும்கையாடினார் தென்னாபிரிக்காவைப்போல் இலங்கையையும் தம்மக்கள் குடியேற வசதியான நாடாகக் கருதிச் செயற்படவும் முயன்றனர். அம்முயற்சி நிறைவேறியிருந்தால் இன்று இலங்கை வெள்ளைமயமாயிருக்கும்.

வெள்ளைமயமான தென்னாபிரிக்கா வெறும் கறுப்பு, ஆனால், ஒருசில வெள்ளையர் நாட்டை ஆளுகின்றார்கள். அதிகாரம் அவர்கள் கையிலேதான். தென்னாபிரிக்கா பெரும் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை கேப் மாகாணம், நத்தால், ரான்ஸ்வால், ஒறேஞ் பிறீஸ் ரேற், தென்மேற்குப்புறொரெக்ரறேற்.

## WE ARE HUMAN BEINGS

Man is born to enjoy and not to suffer. Life is bliss. But suffering has become the badge of some men. Why the fault is not in themselves. But Shakespeare supposes that the fault is in the planets. Any way please take it for granted that life should not be a struggle. — *Somebody*

★ தீயோர் நட்பால் நல்லவரும் கெடுவார் ★

# எல்லாம் எட்டு 8

### அட்டமதம் (செருக்கு)

குலம், ரூபம், யௌவனம், வித்தை, தனம், பிரபுத் தன்மை, சகாயம், சகசம்.

### அட்டமூர்த்தம்

நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன்

### அட்டமூர்த்திகள்

பவன், சருவன், ஈசானன், பசுபதி, வீமன், உக்கிரன், மகாதேவன், உருத்திரன்

### அட்டமூலம்

நன்னாரி, சுக்கு, கோரைக்கிழங்கு, சித்திரமூலம், அரத்தை, கண்டு பாரங்கி, காஞ்சோரிவேர், செவ்வியம்

### அட்டவசுக்கள்

அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபரசன்

### அட்டவர்க்கம்

இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், சுக்கு, திப்பலி, பெருங்காயம், மிளகு

### அட்டவாதம்

சிவசமவாதம், ஐக்கியவாதம், சங்கராந்தவாதம், பிரவாகேஸ்வரவாதம், காபாலிகவாதம், அதிகாரவாதம், பேதாபேதவாதம், அநேகேச்சுரவாதம்




## வரிப்பணம்


முன்னர் முடிமன்னர் காலத்தில் தொடங்கி இன்று வரை நிலவும் வரிப்பணம் பலவிதமாக அரசாங்கத் துக்குப் போகிறது. முன்னர் தமிழ் மன்னர் சிலர் ஆறில் ஒரு பங்கு வரியாக வசூலித்தனர்.

வரி வசூலிப்பு 5000 ஆண்டுகளுக்கு முன்னரும் நிலவிய தற்கு அறிகுறியாக சுமேரியர்களின் களிமண் பலகைகள் கிடைத்துள்ளன. அவை ஜேமனியில் சிக்பேர்க் நகரில் காட்சிக்குரியனவாகவுள்ளன.

எகிப்தில் பேரோ மன்னரின் வரி திரட்டுவோருக்கு முன் முழந்தாள் மடித்து வரி கொடுப்போரின் விபரமும் அறியக்கிடக்கிறது. இந்தியாவில் மாமன்னர் முன் சிற்றரசர்கள் தங்கள் முடிகள் பேரரசரின் பாதங்களைச் சிவக்கச் செய்யுமளவில் தீண்டின என்று புலவர்கள் பாடியுள்ளார்கள்.

கிரேக்க நாட்டில் பலவிதமான வரிகள், வர்த்தக வரிகள் விதிக்கப்பட்டனவென்பர். உரோமர் ஆட்சியில் வரி வசூலித்தல் வரலாற்றுப்புகழ் பெற்றுள்ளது. பைபிள் சுலோகங்களில் வரிகளைப் பற்றியும் வருகின்றன. இன்னும் வரலாற்றுப் புகழ்பெற்ற ஒகஸ்ரஸ் சீசர் பெரு மளவில் அகன்ற நிலமெங்கும் வரி திரட்ட முற்பட்டார் என்பர்.

பிற்காலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் வரி வசூலிப்பதை வற்புறுத்தித் திரட்டி வந்தனர். பிற்காலத் தில் எழுந்த வேடிக்கையான வரிகள் பல ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பழக்கமாயின. கதவுவரி, யன்னல்வரி, போகபோக்கியவரி, புகைபோக்கிவரி, சப்பாத்துவரி, தலையலங்காரவரி இன்னும் எத்தனையோ வரிகள் அன்று ஐரோப்பாவில் திரட்டப்பட்டன. பிறசி யாவில் கோப்பி குடிப்பதற்கும் இரண்டாம் பிரிட்டறிக் வரி விதித்திருந்தார் என்ப. "மக்களை வருத்தாமல் வரி வசூலித்தல் வேண்டும். வரிப்பணம் இன்றேல் அரசு இல்லை" என்பது அக்காலக்கோட்பாடு.




### ஞானகலாம்மையார்

முற்றுந் துறந்த பட்டினத்தடிகள் என்னும் திரு வெண்காடரால் துறக்க முடியாத தாயன்பின் இருப்பிட மாய இவ்வம்மையார், பட்டினத்தடிகளாரின் தாயார்.

### தாடகை

சுகேது என்பானின் புதல்வியும் சுந்தன் என்பானின் மனைவியுமான தாடகை, அகத்தியரின் சாபத்தால் அரக்கியாகி, இராமரால் அழிக்கப்பெற்றவள். இவளின் வேறானவளாய ஒரு சிவபக்தை. இவள் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தவள். தானே இறை

★ நட்புக்கொண்டபின் பிழைகாணலாகாது ★

வனுக்குத் திருமஞ்சனம் சூட்டி அர்ச்சனை செய்பவள். அவள் ஒருசமயம் திருமஞ்சனமாட்டிய வேளையில் உடை நெகிழ்ந்தபோது, அவள் முழங்கையால் அதனை இடுக்கி இடர்ப்பட்டு நீராட்டியபோது, இறைவன் தம் முடியைத் தாழ்த்திக் கொடுத்தார். தாடகையின் பக்தி இருந்தவாறு.

## தேவதேவி

விலைமகளாய இவள் தொண்டரடிப் பொடியாழ் வாரைத் தன்வயமாக்க முயன்றவள். ஆழ்வாரும் மயங்கி அவளோடு கலந்து வந்தார். ஒருநாள் பெருமாள் ஆலயத்துப் பொற்றும்பாளத்தை ஆழ்வாரின் அன்பளிப்பு என்று அவளிடம் கொடுத்தார். இதை அறிந்த அதிகாரி கள் விசாரித்தபோது, அவள் தனக்கு ஆழ்வார் கொடுத் ததாகக் கூறினாள். அதிகாரிகள் ஆழ்வாரை விசாரிக்கப் போன போது பெருமாள் அர்ச்சகர் மூலம் ஆழ்வார் குற்றமற்றவர் என்று கூறுவித்தார். இதை அறிந்த தேவதேவி பெரும் பக்தையாகிப் பணிபுரியலானாள்.

### அறியாமை

அறியாமைகளிலெல்லாம் பெரியதோர் அறியாமை, தெரியாத ஒன்றைத் தனக்குத் தெரிந்ததாகக் கற்பனை செய்து கொள்ளுதலாகும். அதுவே தவறுகளெல்லாவற் றுக்கும் மூலகாரணமாயுள்ளது.

— பிளேட்டோ

### தலைசிறந்த நினைவுச்சின்னம்

வீரன் ஒருவனின் சமாதிக்கு அல்லது நடுகல்லுக்குச் சிறந்த நினைவுச் சின்னம் பாடல்தான். (அதைப் பரணி என்பர் தமிழர்)

— இப்சன்

## ஆனந்தம்!


அவர் நல்ல உயரமானவர். ஓரளவு கருமைதான். ஆனால் பரந்தநெற்றியில் திருநீறு சந்தனம். தலையில் பழையதொப்பி. குறட்காற் சட்டையும் நல்ல சேட்டும் அணிபவர். விரைவாக சைக்கிளில் போகும் போது முக மலர்ச்சியோடு வலக்கரம் உயர்த்தி, ஆனந்தம் என்பார்.

ஆனந்தம் அவர் வாயோயாமல் வாழ்த்தும் சொல். மற்றவரை வாழ்த்தித்தாம் வாழும் அவர். பிள்ளைகள், பேரன்மார், பீட்டப்பிள்ளைகள் கண்டவர் சைக்கிளைக்கைவிடாமல் இன்றும் வேகமாக ஓடுகிறார்.

ஆளைப்பார்த்தால் நெவின்ஸ் செல்வத்துரை அவர் களைப் பார்த்தாற் போல் இருப்பார். நெவின்சர் நீண்ட காலம் இந்துக்கல்லூரி அதிபர். ஆனந்தம் என்று வாழ்த்தும் பெரியவர் எண்பது கண்டும் இளைஞன். அவர் இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரிகளில் பெரிய விளையாட்டு விண்ணன் வீரன். அவரிடம் பழைய புற்போல், கிறிக்கற் ஆட்டங்களைக் கேட்கலாம். ஒரு ஓவரில் 34 எடுத்தவர் பற்றியும் கூறுவர்ர். ஓட்டம், பாய்ச்சல் ரெனிஸ் எல்லாம் அவருக்குச் சீரித்த ஆட்டங்கள்.

அவர் நீண்டகாலம் வாழ்ந்து கொண்டே நிறைவான வாழ்வுக்கு நிம்மதி வேண்டும் என்கிறார். தான்விரும்பும் உணவு, தனது அப்பியாசம் எல்லாவற்றையும் ஆனந் தத்திற்கு அரும் பொக்கிஷம் என்று தமிழிலும் Guide to Prosperity என்று ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துச் சுவாமிகளாய கடைச்சாமி, யோக சுவாமி, முதலானவர்களையும் முன்னிறுத்தியுள்ளார். பழம்பெரு மனிதர்களையும் கூறுகிறார். புத்தகம் ஏதோ சிறிதுதான், முப்பத்தாறு பக்கம் விலையும் குறித்துள்ளார் விலை ரூபா பத்து.

அவர் வேறுயாருமல்லர் இந்துக்கல்லூரி முன்னாள் விடுதிப் பொறுப்பாளர், அரசாங்க பால் விநியோக மேற் பார்வையாளர். அன்பர் எம். சின்னத்தம்பி.



## பண்ணிசையும் இன்னிசையும்

இன்னிசையும் மெல்லிசையும் பண்ணிசையும் நன்கறிந்து, கடல் கடந்த நாடுகளிலேயும் காற்றினிலே கீதம் ஒலிக்கப்பாடிய கலாநிதி சீகாழிப்பிள்ளை யாழ்ப்பா ணம் கண்ட பெரிய சங்கீதவிற்பன்னர். அவர் ஒருமுறை மில்க்வைற் தொழிலக வளாகத்துக்கு வருகைதந்தார்.

மண்டபம் நிறைய இரசிகர் கூடியிருந்த போது அவரை வரவேற்றுத் தலைமைதாங்கிய செய்தியாசிரியர் கூறிய இரண்டேஇரண்டு வாக்கியங்கள் அவரை வெகு வாக உருக்கியது.

''அன்றொரு சீகாழிப்பிள்ளை மதுரையில் திருவால வாய் சென்றார்; பதிகம்பாடினார். இன்றொரு சீகாழிப் பிள்ளை மில்க்வைற் திருவாலவாய் மனைக்கு வந்துள்ளார். பண்ணிசை பாடுவார்'' மலர்ந்தமுகத்துடன் அவர் பாடியவை இன்றும் ஒலிக்கின்றன. மணிக்குரல் ஒலிக் கின்றது, மாணிக்கம் மறைந்துவிட்டது. மறைவை முன் னரே எழுதிவருந்தஉறுதி கிடைக்கவில்லை. இன்று பழஞ் சலிப்பில் வாய்புலம்புகிறோம்.



# போலந்தில் முருகன்

எங்கள் நாடு, உலகில் இருமுக வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ள நாடுகள் சீனு, ரஷ்யா, எகிப்து, பல்கேரியா, செக்கோஸ்லவக்கியா, கிழக்கு ஜேமனி ஹங்கேரி, போலாந்து, ருமேனியா, யூகோஸ்லவயா, வடகொரியா, சிரியா என்பன முக்கியமானவை.

போலந்து கூட்டுச் சேராக்கொள்கைப் பலத்தில் முறுக்கேறியது. நோபல் பரிசுகள் பெற்றவரும் றேடியத்தைக் கண்டுபிடித்தவருமான மேரி கியூரி அம்மையாரைத் தந்த நாடு. தளபதி ஙிற்ரோ என்னும் பெரியவரைத் தந்த நாடு. பிறநாட்டு நாகரிகங்களைப் பெரிதும் விரும்பியறியும் பிரபுத்தன்மை வாய்ந்த மக்களைக்கொண்ட நாடு.

போலாந்துக்குப் பெருமை தந்துள்ள இன்றைய பெண்மணிகளுள் தனுதாபேஞ்சிக்டேவிட் என்பார் ஒருவர். இவர் ஆண்டில் யுவதியாயினும் படிப்பறிவில் முதுமானி. முதுமானியாவதற்கு இவர் செய்த முயற்சி முருகன் மீது கொண்ட பக்தி. முருகபக்தி முறுகக்காரணமாயிருந்தது திருமுருகாற்றுப்படை. திருமுருகாற்றுப் படையில் மூழ்கிய பின் பரிபாடலில் தோய்ந்தார். போலிஷ் மொழியில் பெயர்த்தபின், பரிபாடல், பட்டினப்பாலை இரண்டையும் அழகாக மொழிபெயர்த்தார். ஓய்வு நேரத்தில் கம்பரிலும் பாரதியாரிலும ஈடுபாடு கொண்டு ஓரளவு மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

இந்தியப் பண்பாடு என்று உலகமெங்கும் போற்றப் பெறும் நாகரிகம் தமிழ்நாட்டிலேதான் தாண்டவமாடுவதாகக் கூறிய இப்பெண் சென்னையிலே கல்விகற்றுள்ளார், முருகன் திருத்தலங்களை முறையாக வழிபட்டுள்ளார்.

## மூன்றெழுத்துப் பேராளி மூப்புரிநூலினர்

கி. வா. ஜ. என்ருல் கலைமகள் பத்திரிகை, நல்ல தமிழ், நல்ல சைவம், நல்ல நகைச்சுவை எல்லாம் உள்ள ஐயர் அவர்களைக் குறிக்கும். மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை, மகாமகோபாத்தியாய சுவாமிநாதஐயர், ஜகந்நாதஐயர் மூன்று தலைமுறையில் தமிழறிஞர்கள், குருசிட பரம்பரை நன்ருயமைந்தது.

திருமுறை விளக்கம், கந்தரலங்கார விளக்கம், எழுத்ததிகார விளக்கம், சொல்லதிகார விளக்கம் எல்லாம் இலகுவாக எழுதியவர், 56 ஆண்டுகளாகக் கலைமகளை வளர்த்துத் தமிழ் வளர்த்தவர்,

இலங்கைக்குப் பலமுறை வந்து நகைச்சுவை ததும்பத் தமிழும் சைவமும் பேசியவர். கலைமகளிலேயன்றி, அமிர்தவசனி, மஞ்சரி ஆகிய மாத இதழ்களையும் மலரச்செய்து மணங்கமழ் தமிழின் இளமை நலம் காட்டி விருந்தயரத் தந்தவர். தமிழ்க் கிழவனுரின் நல்லுரைகளைக் கோவைப்படுத்தியும், நினைவுகளை மஞ்சரியாக்கியும், அவர்தம் சரித்திரத்தை அகலமாக எழுதச்செய்தும் தமிழ் வளர்த்த செம்மலாயிருந்தவர்.


## "ஒன்று செய்யுங்கள்"

இன்று காகிதவிலை அச்சுக்கூலி
அதிகரித்து வருகின்றன.
இந்த மில்க்வைற் செய்திப்பணியை
கைவிடவும் விருப்பமில்லை.
நீங்கள்
எங்கள் உற்பத்திப் பொருள்களான




சவர்க்கார வகைகளை வாங்கி
அவற்றின் மேலுறைகளை
எமக்கு அனுப்பினுல்
நாம்
தொடர்ந்து இப்பணியைச் செய்யலாம்.
10 நிலசோப் உறைகளை அனுப்பி
1 மில்க்வைற் செய்தியை இலவசமாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
ஆதரவு தாருங்கள்.
நன்றி.



"மில்க்வைற்"
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 15-11-1988